Deposition of Witness (Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II Court, Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : C.C.511/2016 |
| Police Station | : OT PS |
| Deposition of Witness for Prosecution | : L.W/1/P.W.1 |
| Name | : பாலமுருகன் |
| Father Name/Husband Name | : வரதராஜன் |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01.11.2021

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் மஞ்சக்குப்பத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருச்சோபுரத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 03.09.2016 அன்று நான் குடிகாடு கிராமத்திற்கும் கூடுதல் பொறுப்பு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அன்றைய தினம் இரவு சுமார் 8.45 மணியளவில் நான் குடிகாடு பேருந்து நிறுத்த ரோட்டில் அருகே இருநதபோது பெயர் விலாசம் தெரியாத 60 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் நபர் வலது கால் மற்றும் பின் பக்க மண்டையில் அடிபட்டு பேருந்து நிலைய ரோட்டின் அருகே கிடந்தார். நான் அவர் அருகே சென்று பார்த்தபோது இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தெரிந்தது. உடனே நான் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அந்த நபரை கடலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். அந்த நபர் மறுநாள் 04.09.2016 மாலை 5.30 மணியளவில் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. அந்த அடிபட்ட நபர் அன்றைய தினம் பச்சை நிற முழுக்கை சட்டை அணிந்திருந்தார் அதன்பின் நான் மறுநாள் காலை 10.30 மணியளவில் மறுநாள் கடலூர் முதுநகர் காவல் நிலையம் சென்று மேற்படி சம்பவம் குறித்து புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு காவல் நிலையத்தில் என்னால் கொடுக்கப்பட்டதுதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அந்த புகார் மனு அதசாஆ 1 ஆகும். அதன்பின் 05.09.2016 மாலை இறந்துபோன நபர் வழிசோதனைபாளையத்தை சேர்ந்தவர் என்று ஆய்வாளர் எனக்கு தகவல் சொன்னார். போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பச்சையாங்குப்பம் கிராம நிர்வாக அலுவலராக தேர்வு செய்யப்பட்டிந்தேன் என்றும்

அப்போது குடிகாடு கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பினை யார் உங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது என்றால் அந்த நேரம் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவின்படி நான் குடிகாடு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். போலிசாரிடம் நான்தான் குடிகாடு கிராம நிர்வாக அலுவலர் என்பதை ஊர்ஜிதம் செய்வதற்கு ஆவணம் ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. நான் பச்சையாங்குப்பம் கிராம நிர்வாக அலுவலர் என்றும் குடிகாடு அலுவலர் இல்லை ஏனென்றால் அதுகுறித்து ஊர்ஜிதம் செய்வதற்கு ஆவணம அதிகாரியிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் 24 மணி நேரமும் வாகனங்கள் செல்லக்கூடிய இடம் என்றால் சரிதான். அனைத்து வகையான வாகனங்களும் அந்த வழியாக பயணிக்கும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான்தான் இறந்துபோனவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததை பற்றி முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் போலிஸ் விசாரணையில் மற்றும் புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா இல்லை. முதல் விசாரணையில் இறந்துபோனவரை இடித்த வாகனம் இருசக்கர வாகனம் என்று சொல்லியுள்ளேன் என்றும் அந்த நபரை இருசக்கர வாகனம்தான் இடித்தது என்று எவ்வாறு கணித்தீர்கள் என்றால் அடிபட்டதை பார்த்து அனுமானத்தின்பேரில் இருசக்கர வாகனம் என்று குறிப்பிட்டுள்ளேன். இந்த விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதிற்கிணங்க ஒரு வெள்ளைதாளில் கையொப்பம் போட்டுவிட்டு போலிசாருக்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the/him to the correct.

-Sd-R.D.Aarthi, B.A,B.L.,(Hons)

Cuddalore.

Deposition of Witness (Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II Court, Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : C.C.511/2016 |
| Police Station | : OT PS |
| Deposition of Witness for Prosecution | : L.W/2/P.W.2 |
| Name | : ராமலிங்கம் |
| Father Name/Husband Name | :வீரமுத்து |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01.11.2021

**முதல் விசாரணை**

நான் தற்போது குடிகாடு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வேலை ஏதும் செய்யவில்லை. வீட்டில்தான் இருக்கிறேன். வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் அரசு தரப்பில் சாட்சிய குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதிகேட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து அனுமதிக்கப்பட்டடு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள் என்றும் கடந்த 03.09.2016 அன்று இரவு சுமார் 8.45 மணியளவில் குடிகாடு பஸ் ஸ்டாப் அருகே நானும் எங்க தெருவை சேர்ந்த தண்டபாணி மகன் கதிர்வேல் இருவரும் பேசிக்கொண்டு இருநதபோது எங்களுக்கு எதிரே சாலையின் இடது ஓரத்தில் சுமாஙர் 50 வயது மதிக்கத்தக்க ஒருவர் நடந்து வந்து கொண்டிருநதபோது அவருக்கு பின்னார் வந்த PY 01 W 5130 என்ற கொண்ட Hero Honda இருசக்கர வாகன ஓட்டுனர் அதிவேகமாகவும் அஜாக்கரதையாகவும் ஓட்டி வந்து நடந்து வந்தவர் மீது மோதியதில் நிலை தடுமாறி கீழே விழுந்தவருக்கு பின் பக்க தலையிலும் வலது காலில் பலத்த காயத்தோடு பேச முடியாத நிலையில் இருந்தார் என்றும் இருசக்கர வாகனத்தில் வந்தவருக்கும் காயம் ஏற்பட்டு இருந்தவரை விசாரிக்கும்போது அன்னவல்லி மதரியம்மன்கோவில் தெருவை சேர்ந்த ராகவன் மகன் ஜவகர் என்று சொன்னார் என்றும் பின் அடிபட்ட இருவரையும் நாங்களும் அந்த சமயம் அங்கு இருந்தவர்களும் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்து அடிபட்ட இருவரையும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் போலிஸ் விசாரணையில் உண்மையை சொல்லிவிட்டு அரசு தரப்பு சாட்சியத்திலிருநது விலகி எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the/him to the correct.

-Sd-R.D.Aarthi, B.A,B.L.,(Hons)

Cuddalore.